1974 மார்ச் 16]

திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலைவரவர்களே, படித்த பட்டதாரிகள் வேலையில்லாமல் சிரமப்படுகிறார்கள் என்பது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்கே தெரியும். ஒரு படித்த ஹரிஜனப் பெண்—பி.ஏ. பட்டம் பெற்றவள்—புல் வெட்டிக்கொண்டு ஒரு ரூபாய் கூலி வாங்கிக்கொண்டு இரண்டு ஆண்டுகளாக வாழ்க்கை நடத்தும் நிலை இருக்கிறது என்றால், இதைத் தவிர்க்க அரசாங்கம் திட்டங்களைத் தயாரிக்குமா என்று கேட்டதற்கு யோசிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சேல்ஸ் டாக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் போடுவதன் மூலம் ஒரு 5,000 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புத் தர முடியும் என்று சொன்னேன். அதை ஒரு யோசனை என்று சொன்னார்கள். அந்த யோசனையை யோசனை என்று விட்டு விடாமல், அந்த யோசனையை ஏற்று, எதிர்காலத்தில் அதை நடைமுறைப்படுத்துவதற்கு என்ன தயக்கம் என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, புல் வெட்டுகிற பி.ஏ. அரிசன பெண்களைப் பற்றியும், இந்த வருமான வரி இலாகாவில் வேலை வாய்ப்பு உருவாக்குவது பற்றியும், நானும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நீண்ட நேரம் விவாதித்து இருக்கிறோம். அதனால்தான் யோசனை என்று சொன்னேனே தவிர வேறு அல்ல.

Industrial Cadre of Officers.

* 465 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to create an Industrial Cadre of officers to man the public Sector concerns ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

திரு. என்.கே. பழனிசாமி: தலைவரவர்களே, இப்போது பொதுத்துறையில் இன்ஜினீர் போன்றவர்களுக்குச் சரியான முறையில் கல்வி கொடுத்து மறுபடியும் அவர்களை உத்தியோகத்தில் உயர்த்துவதற்குப் பதிலாக, இந்த ஐ.ஏ.எஸ். படித்தவர்களைப் பொதுத்துறையில் போடுவதன் காரணமாக அவகளுக்கு அதிகமான பரிச்சயம் அந்தத் துறையில் இல்லை. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் எலெக்ட்ரிசிடி போர்ட்டில் சிவில் இன்ஜினீர் தலைவராக இருக்கிறார். மெகானிகல் இன்ஜினீர்க்கு சரியான முறையில் பயிற்சி கொடுத்து செய்வதற்கு பதிலாக, இந்த மாதிரி ஐ.ஏ.எஸ். படித்தவர்களைப் போடாமல், அந்தத் துறையில் பயிற்சி பெற்றுள்ளவர்கள் அதன் நிர்வாகததின் பொறுப்பில் வைப்பதற்கு இந்த மாதிரித் திட்டங்களை அமல் செய்தால் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

[1974 மார்ச் 16

மாண்புமிகு திரு செ. மாதவன்: எலெக்ட்ரிசிடி போர்ட் சேர்மன் சிவில் இன்ஜினீர் இல்லை. ஆனால் இது போன்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இப்போது புதிய தொழிற்சாலைகளை நாம் ஏராளமாகத் தொடங்குவதால், ப்ரொபஷனல்ஸ், தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற ஒரு கேடர் உருவாக்கவேண்டுமென்று அரசாங்கத்தின கொள்கை. அதன் விவரங்கள் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

சோப்புத் தொழிற்சாலைகள்

9 வினா. 466.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரச:

(அ) தமிழகத்தில் சோப்பு செய்யும் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த ஊரில்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): ஆம். தமிழ்நாட்டில் சோப்பு செய்யும் தொழிற்சாலை அமைக்க கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு மத்திய அரசு உரிமம் வழங்கியுள்ளது:—

நிறுவனத்தின் பெயர்.	உரிமம் வழங்கின வருடம்.	உற்பத்தி செய்யும் பொருட்கள்.
ரெமி பர்ஃப்யூம்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-1.	1956	சோப்—24 டன்கள். முகப்பவுடர்—60 டன்கள். பற்பசை—18 டன்கள்.
ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) (பிரைவேட்) லிமிடெட், சென்னை-1 (தற்பொழுது டாடா ஆயில் மில்ஸ், கம்பெனி லிமிடெட் வாங்கி நடத்துகிறது).	1962	ரெமெக்ஸ் சோப் —300 டன்கள். சலவை சோப், வாசனை சோப், சோப்புத்தூள் முதலியன—1,350 டன்கள்.
	1967	நிலக்கரித்தாரில் இருந்து செய்யப் படும் சோப்—120 டன்கள்.

திரு. கே.எ. வகாப்: தலைவரவர்களே, இப்போது சந்தன சோப்புகளுக்கு உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே, வடாற்காடு மாவட்டத்தில் இருக்கும் ஜவ்வாது மலையில் விளையும் சந்தனக் கட்டைகளைக் கொண்டு, சந்தன சோப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு தற்போது இருக்கிறதா, மத்திய அரசின் அனுமதியோடு தொடங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?